விச்வாவஸு ஹு கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2025

மலர்: 8
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்







MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



பேயாழ்வார் உத்ஸவம்

விச்வாவஸு ௵ கார்த்திகை ௴
நவம்பர் - டிஸம்பர் 2025

மலர்: 8
இதழ்: 8

ஸ்ரீ:



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand, Thillai Ranganathan, N.V. Narayanan & M. Gosakhan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

எம்பெருமானின் திருவாரதனத்திற்கு முற்படவே ஏற்றும் தீபத்திற்க்காகவே ப்ரத்யேகமாக உத்ஸவம் கொண்டாடும் மாதம் இந்த கார்த்திகை. மேலும் வேதமும் நக்ஷத்ர ஸூக்தம் எனும் பாகத்திலும், ஜோதிஷத்திலும் க்ருத்திகைக்குத் தான் முதலிடம் தரப்பட்டுள்ளது.

இந்த மாதத்தின் அதிஷ்டான தேவதை தாமோதரன் எனும் திருநாமத்தையுடைய எம்பெருமானே ஆவான். பெரிய அஜ்ஞானத்தைப் போக்குகின்ற, மதிள்சூழ்ந்த ஹஸ்திகிரியில் உள்ள, மரகத ரத்நம்போன்ற பேரருளாளன் என் தாமோதரனாகி, நான்கு பாசங்களைத் திருக்கைகளில் ஏந்தி, இந்தப் பெருமை மற்றவருக்கு உண்டோ என்னும்படி சரீரத்தின் உள்ளேயும், வெளியிலும், கழுத்தின் பின்புறத்தும் நின்று, உதிக்கின்ற ஸூர்யனென்னும்படி நிறமுடையனாயிருந்து எனது மனத்துள் இருக்கும் அஜ்ஞானமாகிய இருளைப் போக்குவான் என்றும், பேரருளாளன் திருவடிகளில் ஈடுபட்ட பாகவதர்க்குப் பரம போக்யமான இப்பன்னிருநாம ப்ரபந்தத்தை அநுஸந்திப்பவர் பகவத்பக்தி பெருகப் பெற்று உபாயத்தை அநுஷ்டித்து மோக்ஷம் பெறுவர் என்றும் போற்றிப் புகழ்கிறார் ஸ்வாமி தேசிகன்.

இக்கார்த்திகை மாதத்தில் நம் ஸந்நிதியில் திருச்சானூரைப் போன்று ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயாருக்கு ஒன்பது நாட்கள் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் தீர்த்தவாரியுடன் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

இருளனைத்தும் போக்கும் பரிதி ஒளிபோல் மருளனைத்தும் நீக்கும் அருள்மிகு பாசுரங்களை ஓதியவரும், ஆழ்வார்களுள் கடையவரும் எப்பொழுதும் ஸாரம் கடைசியில் தான் தெரியும் எனும் கருத்திற்கு ஏற்ப மற்றைய ஆழ்வார்களுடைய பாசுரங்களைத் திரட்டி, விரிவாகவும் தெளிவாகவும் ஸூக்ஷ்மமாகவும் நமக்கு பரமோபகாரம் செய்தருளிய பரகாலன் அவதரித்தது இந்த கார்த்திகையில் கார்த்திகைதான்.

அணுவில் அண்டத்தை அடைப்பதுபோல் பத்தே பாசுரத்தில் ஸ்ரீரங்கநாதனின் பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் பரக்கப் பேசியவரும் க்யாதி-லாப-பூஜா விமுகராகவும், மஹிமையை மறைத்து மாநிலத்தில் வாழ்ந்த மாமனிதருமான திருப்பாணாழ்வார் கார்த்திகை ரோஹிணியில் அவதரித்தது இம்மாதத்தின் மேன்மை.

சாஸ்த்ர ரீதியான பண்டிகையான திருக்கார்த்திகை, தீபோத்ஸவமாகக் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை நம் ஸந்நிதியில் பொழுதோடு எம்பெருமான் திருவாரதனம் கண்டருளி அலங்காரஸனத்தில் கோயிலில் உள்ள எல்லா ஸந்நிதிகளிலும் மற்றும் நம் ஆசார்யரின் ராஜகோபுரத்திலும் தீபங்களை ஏற்றுவது வழக்கம். பின்பு புறப்பாட்டில் பெருமாள், ஆழ்வார் மற்றும் தேசிகனுடன் சொக்கபாணம் கண்டருள்வார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த மாத தேசிக ஸந்தேசம், விசேஷ வ்யாஸங்கள், ஆங்கிலத் தொடர்கள், ஐப்பசி மாதத்திய உத்ஸவங்களின் வண்ணப்படங்கள் இவற்றுடன் உங்கள் கரங்களில்...

ஸ்ரீ:

# Jyothi Jwala & Thayar Theertha Thirunal

## FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of Sri Alarmelmangai Thayar Sametha Sri Srinivasa Perumal and Sri Vedantha Desikan, our Devasthanam has been blessed with a continuous stream of sacred celebrations throughout the months of Aippasi and Karthikai.

The divine fervour of Aippasi began with the Deepavali festival, celebrated with great joy and spiritual splendour. The radiant lamps lit within the temple premises illuminated not only the sanctum but also the hearts of devotees, symbolising the victory of light over darkness and righteousness over ignorance. The atmosphere was filled with peace and auspiciousness.

This was followed by the grand 10-day Sri Peyazhwar Thirunakshatra Utsavam. The Devasthanam was beautifully adorned as we commemorated the Avathara Mahimai of Thirumayilai Peyazhwar, whose divine pasurams are an integral part of our sacred Devya Prabandham. The daily processions, heartfelt recitations of Divya Prabandham, and special sevais were conducted with profound devotion, witnessed by a gathering of devout bhagavathas.

As we enter the sacred month of Karthikai, we joyfully anticipate the Karthikai Deepam festival — a magnificent celebration of divine light that symbolizes the eternal brilliance of Sriman Narayana. In keeping with our cherished tradition, the Devasthanam aims to illuminate a minimum of 40,000 lamps this year, signifying the dispelling of ignorance and the triumph of spiritual knowledge.

We will also be treated to the Thayar Panchami Theertha Utsavam, a deeply significant occasion dedicated to seeking the benevolent blessings of Thayar. This utsavam marks the sacred birth of Goddess Padmavati and the grand culmination of her annual nine-day Brahmotsavam at our Devasthanam. The sacred theertham and rituals performed during this period are believed to bestow prosperity, health, and happiness to all devotees.



We take great pride in continuing a glorious Sri Vaishnava tradition, celebrating this festival in such grandeur and elaboration at our Sri Vedantha Desikar Devasthanam, as next to Tiruchanoor.

We express our heartfelt gratitude to all devotees, volunteers, and patrons for their unwavering support, selfless service, and devout participation. May Sri Alarmelmangai Thayar Sametha Sri Srinivasa Perumal and Sri Vedantha Desikan forever bless us all with robust health, profound peace, and unwavering devotion. ❈

ஸ்ரீ:

| விச்வாவஸு வருட கார்த்திகை மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
| நவம்பர் / டிஸம்பர் | கார்த் திகை | | | | | |
| 17.11.2025 | 1 | த்வாதசி / த்ரயோதசி | திங்கள் | சித்திரை | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 1-ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம். மாலை பத்ம வாஹனம் உள்புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ D.S. ராஜகோபாலன் |
| 18.11.2025 | 2 | த்ரயோதசி / சதுர்தசி | செவ்வாய் | சித்திரை / ஸ்வாதி | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 2-ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம். மாலை ஸூர்யப்ரபை உள்புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. வரதாச்சாரி குடும்பத்தினர் |
| 19.11.2025 | 3 | சதுர்தசி / அமாவாசை | புதன் | ஸ்வாதி / விசாகம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 3-ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம். மாலை கருட வாஹனம் உள்புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ S. ஸுந்தர ராகவன் |
| 20.11.2025 | 4 | அமாவாசை / ப்ரதமை | வியாழன் | விசாகம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 4-ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம். மாலை சந்த்ரப்ரபை உள்புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 21.11.2025 | 5 | ப்ரதமை | வெள்ளி | அனுஷம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 5-ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம். மாலை கிளி வாஹனம் உள்புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | பஞ்சமி தீர்த்தம்: ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன். வெள்ளிக் கிழமை: (1) ஸ்ரீ N. வராஹன், (2) சேர்ப்பாக்கம் தட்டை ஸ்ரீ பார்த்தஸாரதி குடும்பத்தினர் |
| 22.11.2025 | 6 | த்விதீயை | சனி | கேட்டை | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 6-ம் நாள். காலை தாயார் திருமஞ் ஜனம். மாலை யானை வாஹனம் உள் புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பார்த்தஸாரதி நரஸிம்ஹன் |
| 23.11.2025 | 7 | த்ருதீயை | ஞாயிறு | மூலம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 7-ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம். மாலை கஜலக்ஷ்மி வாஹனம் உள் புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ L.V. நரஸிம்ஹன் குடும்பத்தினர் |
| 24.11.2025 | 8 | சதுர்த்தி | திங்கள் | பூராடம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 8-ம் நாள். காலை தாயார் திருமஞ் ஜனம். மாலை குதிரை வாஹனம் உள் புறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி கமலா – சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர். திருமஞ்ஜனம் மட்டும்: ஸ்ரீமதி வஸந்தா வாஸுதேவன் |
| 25.11.2025 | 9 | பஞ்சமி | செவ்வாய் | உத்திராடம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 9-ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம், தீர்த்த வாரி. மாலை தங்க கேடயம் உள்புறப் பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை. கலியன் உத்ஸவம் 1-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பஞ்சமி தீர்த்தம்: ஸ்ரீ R. ராஜகோபாலன். கலியன் உத்ஸவம்: 25.11.2025 முதல் 04.12.25 வரை செட்டிபுண்யம் ஸ்ரீ C.S. பார்த்தஸாரதி |
| 26.11.2025 | 10 | ஷஷ்டி | புதன் | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு. ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. கலியன் உத்ஸவம் 2-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ச்ரவணம்: ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் குடும்பத்தினர் |
| 27.11.2025 | 11 | ஸப்தமி | வியாழன் | அவிட்டம் | கலியன் உத்ஸவம் 3-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.11.2025 | 12 | அஷ்டமி | வெள்ளி | சதயம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு. கலியன் உத்ஸவம் 4-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வெள்ளிக்கிழமை: ஸ்ரீ R. ராஜகோபாலன் |
| 29.11.2025 | 13 | நவமி | சனி | பூரட்டாதி | கலியன் உத்ஸவம் 5-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 30.11.2025 | 14 | தசமி | ஞாயிறு | உத்திரட்டாதி | கலியன் உத்ஸவம் 6-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 01.12.2025 | 15 | ஏகாதசி | திங்கள் | ரேவதி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. கைசிக ஏகாதசி. கலியன் உத்ஸவம் 7-ம் நாள். மாலை, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஏகாதசி: ஸ்ரீ M.V. ஸந்தானம் |
| 02.12.2025 | 16 | த்வாதசி / த்ரயோதசி | செவ்வாய் | அச்வினி | கைசிக த்வாதசி. புராண படனம். கலியன் உத்ஸவம் 8-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | புராண படனம்: ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் |
| 03.12.2025 | 17 | த்ரயோதசி / சதுர்தசி | புதன் | பரணி | கலியன் உத்ஸவம் 9-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. மாலை பரணி தீபம் லக்ஷ தீபம் | |
| 04.12.2025 | 18 | சதுர்தசி / பௌர்ணமி | வியாழன் | க்ருத்திகை | கலியன் சாற்றுமுறை. காலை பெருமாள், கலியன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், கலியன் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | செட்டிபுண்யம் ஸ்ரீ C.S. பார்த்தஸாரதி |
| 05.12.2025 | 19 | ப்ரதமை | வெள்ளி | ரோஹிணி | திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம். கார்த்திகை தீபம். காலை பெருமாள், தாயார், ஆழ்வார், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். பின்பு பெருமாள், ஆழ்வார், தேசிகன் வீதிபுறப்பாடு; பின்பு தாயாருடன் உள்புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. தைலக்காப்பு | திருமஞ்ஜனம்: ஸ்ரீமதி L. வத்ஸலா. வீதிபுறப்பாடு : ஸ்ரீ N.S. வரதாச்சாரி குடும்பத்தினர். திருப்பாணாழ்வார் உத்ஸவம் : ஸ்ரீமதி சாந்தா சடகோபன். வெள்ளிக்கிழமை: T.V.S. மோட்டார் கம்பெனி |
| 06.12.2025 | 20 | த்விதீயை | சனி | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 07.12.2025 | 21 | த்ருதீயை | ஞாயிறு | திருவாதிரை / புனர்வஸு | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 08.12.2025 | 22 | சதுர்த்தி | திங்கள் | புனர்வஸு / புஷ்யம் | குலசேகராழ்வார் | |
| 09.12.2025 | 23 | பஞ்சமி | செவ்வாய் | புஷ்யம் / ஆயில்யம் | திருமால்வடை | |
| 10.12.2025 | 24 | ஷஷ்டி | புதன் | ஆயில்யம் / மகம் | திருமால்வடை | |
| 11.12.2025 | 25 | ஸப்தமி | வியாழன் | மகம் / பூரம் | திருமழிசைப்பிரான் | |
| 12.12.2025 | 26 | அஷ்டமி | வெள்ளி | பூரம் / உத்திரம் | ஆண்டாள் | |
| 13.12.2025 | 27 | நவமி | சனி | உத்திரம் / ஹஸ்தம் | தாயார் | |
| 14.12.2025 | 28 | தசமி | ஞாயிறு | ஹஸ்தம் | கூரத்தாழ்வான் | |
| 15.12.2025 | 29 | ஏகாதசி | திங்கள் | சித்திரை | மதுரகவிகள் | |

# கலியனின் தனி அநுபவம்

தேரழுந்தூர் ஸ்ரீ உ.வே. ஆ. ராமபத்ராசார்யர் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

அன்று முதல் இன்றுவரை, மனித குலம் பிழைத்து உய்வதற்குக் காரணமாக இருப்பது பக்தி நெறி. அந்த பக்தி நெறியிலே தான் எத்தனை வகைகள்? பக்தர்களுக்குத்தான் எத்தனை அநுபவங்கள்? அவரவர் கொண்டிருக்கும் பக்தி உணர்வின் அளவிற்கு ஏற்றவாறு, அவர்கள் பெறும் அநுபவமும் காணப்படும். ஆதி காவ்யமாகிய ராமாயணம், பாரதம் போன்ற இதிஹாஸங்களும், பாகவதம் போன்ற புராணங்களும், அவ்வநுபவங்களின் ப்ரதிபலிப்பாக எழுந்தனவேயாம். இந்த வகையில், பக்தி உலகில், மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பெற்ற அநுபவங்களுக்கு ஈடான ஒன்றை நாம் வேறு யாரிடத்தும் காண முடியாது. பக்தி உலக விசித்ரங்களில் தான் அவைகளைச் சேர்க்க முடியும்.

சக்ரவர்த்தித் திருமகனுடன் ஸம காலத்தில் வாழ்ந்த வால்மீகி பெறாத அருள் அநுபவங்களை - வ்யாஸர் பெறாத வியத்தகு செய்திகளை -ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் நாம் காணலாம். அவை களில்தான் எத்தனை வேறுபாடுகள்? கண்ணனின் இளமைத் திருவிளையாடல்களைக் காணும் பேறுபெற்ற யசோதையாக - அவனுடன் பழகும் பேறு பெற்ற கோபியராகத் - திருமங்கை மன்னன், பெரியாழ்வார் போன்றோர், தாமே மாறி நின்று, அநுபவித்து மகிழ்ந்து நிற்பர்.

கண்ணனை வளர்த்து மகிழும் இன்ப அநுபவத்தை இழந்த தேவகியாக நின்று புலம்புவார் குலசேகரர். அவரே, கானகம் சென்ற ராமனை நினைத்துப் புலம்பி வருந்தும் தசரதனாக மாறித் தவித்து நிற்பார். பெருங் கடலைத் தாண்டி, பிராட்டியைக் கண்டு, கணையாழி கொடுத்து அடையாளம் உரைக்கும் அநுமனாக மாறுவார் பெரியாழ்வார். ஆதி காவ்யம் கூறும் அடையாளங்களில் இல்லாத புதிய அநுபவங்களைக் கூட ஆழ்வாராகிய அநுமன் எடுத்துக் கூறுவார். ஞானத்தில் தன் பேச்சாகப் பேசும் பராங்குசன், ப்ரேமத்தில் பராங்குச நாயகியாக மாறிப் பேசுவார். அதே காரணத்தால், பரகாலனும் பரகால நாயகியாக மாறுவார்.

இவ்வாறு எம்பெருமானைப் பல நிலைகளில் நின்று அநுபவிக்கும் முறையைப் பிற்காலக் கவிஞராகிய பாரதியிடத்தும் நாம் காணலாம். கண்ணனைக் காதலனாகவும், கண்ணனைக் கண்ணம்மாவாக மாற்றித் தன் காதலியாகவும், ஸேவகனாகவும், தந்தையாகவும், தாயாகவும், ஆசானாகவும், நண்பனாகவும், இன்னும் பிறராகவும் அநுபவித்த அநுபவமே கண்ணன் பாட்டாக உருவெடுத்தது.

ஆனால் மற்ற எவரிடத்திலும் காணமுடியாத சிறப்புடைய அநுபவம் திருமங்கை மன்னனின் பாசுரங்களில் காணப்படுகின்றது. எம்பெருமானுக்குச் செய்யும் பணிவிடையால் பெருமை பெற்றும், அவனிடத்துச் செலுத்தும் அன்பினால் புகழ் பெற்றும், இதிஹாஸ, புராண, காவ்ய பாத்ரங்களாகத் தங்களைப் பாவித்து எம்பெருமானை அநுபவிப்பதைக் காட்டிலும் தம்மைக் கொடிய அரக்கராக நினைத்து, அதிலும், ராமனுடைய வீரத்திற்குத் தோற்று அழிந்த ராவணனின் பரிவாரங்களாகிய அரக்கராகத் தம்மை நினைத்துப் பேசுதல் மிகவும் புதுமையான நிலையாகும். எல்லோரும் ஒவ்வொரு வகையில் ராமனிடம் தோற்றவரே. சிலர் இளைய பெருமாளைப் போன்று ராமனின் குணங்களுக்குத் தோற்பர். சிலர் அழகுக்குத் தோற்பர். ஆனால் இங்கே, ராமனின் வீரத்திற்குத் தோற்ற அரக்கராகத் தம்மைக் கூறிக் கொள்கிறார் ஆழ்வார்.

அரக்கர்களிலும் விபீஷணன் போன்றோரைப் போலத் தம்மை நினைத்துப் பேசினாலும் அது ஒரு வகையில் பொருந்தும். ஏனெனில், ராவணன் சிறப்புடன், குறைவில்லாமல் வாழ்ந்த காலத்திலேயே, அவன் பிராட்டியிடம் புரிந்த குற்றத்தை எடுத்துக் காட்டி ராமனை சரண் அடையுமாறு அறிவுரை கூறியும், ராவணன் எதையும் ஏற்காத காரணத்தால் எல்லாவற்றையும் கைவிட்டு ராமனைச் சேர்ந்தவன் விபீஷணன்.

ஆனால் இங்கு கூறப் பெறும் அரக்கர், ராவணனுடைய கொடுமைகளுக்கெல்லாம் துணையாக இருந்தவர்கள். அவனுடைய குற்றங்கள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டவர்கள். தற்போது ராவணன் மரணத்தை அடைய இருக்கும் காரணத்தால், வேறு புகலிடம் இல்லாமல், ராமனிடத்தும் அவன் கூட்டத்தாரிடத்தும் அடைக்கலத்தை வேண்டியும், தம்மைக் கொல்லாது இருக்குமாறு வேண்டியும் நிற்கும் நிலையில் உள்ளவர்கள் ஆவர்.

ராவணன் செய்த மாபெரும் குற்றத்திற்கு, அவன் கொல்லப் படத்தக்கவன் என்றால், இறுதி வரையில், அவனுக்கு உடந்தையாய் இருந்த குற்றத்தினைச் செய்த இவர்களும் தண்டனைக்குரியவர்களே. இருப்பினும் ராமனுடைய வெற்றியைத்தம் வாயால் மட்டும் போற்றுவதற்கு விரும்பாமல், தோற்றுப்போன அரக்கராகத் தான் மாறி, அவர்கள் வாயிலாகத் திருமங்கைமன்னன் போற்ற விரும்பினார் என்றால், அவ்வரக்கரிடத்தில் எம்பெருமான் கொண்ட கருணையைப் போன்று கலியனும் கொண்டிருந்த பெருங் கருணைத் திறம் நமக்கு நன்கு விளங்கும்.

அது மட்டுமன்றி, வாழ்நாள் முடியும் வரை தலை வணங்கேன் என்று இருந்த ராவணன் அடையாத பேற்றை அரக்கர் பெறுமாறு செய்தது ஆழ்வாரின் கருணைத் திறம் என்பதை நினைக்கும்போது, எல்லையில்லாத வியப்பையும் மகிழ்ச்சியையும் ஒன்றாக அடைகிறோம்.

ஆழ்வாரின் இந்நிலையை, ''தமக்கு அபிமதமான (விருப்பமான) ராம ராம வெற்றியை எதிரிகள் மேலெழுத்திட்ட பாசுரத்தாலே அநுபவிக்கிறார். அத்தகைய விஜயம், தமக்கு இஷ்டமாகையாலே அந்த விஜயத்துக்கு இலக்காய்த் தோற்ற ராக்ஷஸர் நிலை பிறந்து, பிராட்டிமார் தசை பிறந்து பேசுமாப்போலே, தாமான தன்மை தோற்றாதே, தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே ராமவிஜயத்தைப் பேசி அநுபவிக்கிறார்'' என்ற ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாந முன்னுரை நன்கு விளக்கும். இவ்வாறு தோற்ற அரக்கர், பாடிய பாசுரங்களாக, இருபது பாசுரங்களை அருளுகிறார் திருமங்கை மன்னன். அவ்விருபது பாசுரங்களிலும், முதல் பத்து பாசுரங்களில் ஒவ்வொன்றும் **பொங்கத்தம் பொங்கோ** என்றும், அடுத்த பத்துப் பாசுரங்களில் ஒவ்வொன்றும் **குழமணி தூரம்** என்றும் முடிகின்றன.

போர்க்களத்தில், பகைவர்களுடன் போரிட்டு வெற்றி பெற்றவர்கள் இசைக் கருவிகளை முழக்கி, அதற்கு ஏற்ற வண்ணம், வெற்றிக் கூத்து ஆடுவதுபோல், தோற்றவர்கள் தங்கள் தோல்வியை வெளிப்படுத்த நினைத்து, பறை அடித்து ஆடுகின்ற ஒரு கூத்து அக்காலத்தில் வழக்கத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. இதனைக் குழமணி தூரக் கூத்து என்றும் கூறுவர்.

இதனை, 'தோற்றவர்கள் தோல்வியாலே பறை அடிக்க ஆடுவது ஒரு கூத்து உண்டு' என்ற ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்திற்கு விளக்கம் எழுதிய அரும்பத உரைகாரர், ''ஆடுவதொரு கூத்து'' என்றது, ''குழமணி தூரம் என்ற கூத்து என்ற கருத்து'' என்று கூறியது நன்கு விளக்கும்.

இந்தக் கூத்தினை, ஒலிக்குறிப்பால் வெளிப்படுத்தும் சொல் அமைப்பே ''பொங்கத்தம் பொங்கம்'' என்பதாகும். உலகில் பல வகைப் பொருள்களையும், செயல்களையும் ஒலிக் குறிப்பால் தெரியப்படுத்துவது போன்று, தோற்றவர் ஆடும் கூத்தினைக் குறிக்கும் சொல் அமைப்பே இது என்பர்.

''பொங்கத்தம் பொங்கம் என்ற இந்த நடனம் தான் நாங்கள் ஆடுவதற்குத் தகுதியானது. அதனை ஆடுகிறோம் என்று சொல்லுகின்றவர்களாய், தடம் பொங்கத்தம் பொங்கோ என்றனர் (பொங்கத்தம் பொங்கோ-தடம் என்று பொருத்திக்கொள்ள வேண்டும். தடம் ஏற்றது ராமனிடத்தும், வானரரிடத்தும் உள்ள அச்சத்தினால், பொங்கத்தம் பொங்கம் என்று சொல்லாமல், **பொங்கத்தம் பொங்கோ!** என்று புலம்பல் குறிப்போடு சொல்லுவதைக் காணலாம்).

முதலில் வானரப் படைத் தலைவர்களையும், அதன் பின்பு இளைய பெருமாளையும், பின்பு ராமனையும் அழைப்பவர்களாய், **குரக்கு நாயகர்காள் ! இளங்கோவே! கோலவல்வில் இராமபிரானே!** என்று அழைத்துச் சொல்லத் தொடங்கினார்கள். இந்த வரிசையைப் பார்க்குங்கால், **இவரை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே** என்றபடி, முதலில் குரங்கினத் தலைவர்களை சரண் அடைந்து, அவர்கள் உதவியால், இளைய பெருமாளின் அருளைப் பெற்று, பின்பு அவ்விளையவனின் புருஷகாரத்தால் ராமனை அடையலாம் என்ற அரக்கரின் விருப்பம் நன்கு விளங்கும்.

இவ்வாறு அழைத்து, 'பெருமக்களே! எமது தலைவனான ராவணன், இரக்கம் இல்லாமல் செய்த பெருங் குற்றம், இப்பிறவியிலேயே அவனுக்கு மட்டும் அல்லாமல், எங்கள் வரையில் அதன் பலனைக் கொடுத்து விட்டது. இரக்கம் இருந்திருந்தால், அவன் இவ்வாறு செய்திருக்க மாட்டான். எம்பெருமானையும் பிராட்டியையும் சேர்த்துப் பார்த்து, வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு என்று ஆழ்வார் அருளிய வகையில் பல்லாண்டு பாடிப் போற்றி, வாழ்த்தி இருப்பான்; அவ்விரக்கம் இல்லாமையால் அல்லவா, இத் தெய்வத் தம்பதிகளைப் பிரித்து விட்டான்?' என்றனர்.

இவ்விடத்தில், கவிச் சக்ரவர்த்தி, **பஞ்சு எனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி வஞ்சன்** என்று விபீஷணன் வாக்கினால், ராவணனை வெறுத்துக் கூறிய தொடர், சிந்திக்கத்தக்கது.

''மிதுனத்தை (இணையை)ப் பிரித்த நிர்தயனான (இரக்கம் அற்றவனான) இராவணன்'' என்ற உரைகாரரின் விளக்கமும் காணத்தக்கது. இதற்கு வேறொரு வகையில், இராவணன் உள்ளத்தில், அரக்கர் பால் இரக்கம் இருந்திருப்பின் ''தான் செய்த குற்றத் திற்கான தண்டனை தன் இனத்தாரையும் சேருமே'' என்று நினைத்து, அதற்காகவாவது பிராட்டியிடம் தவறு செய்திருக்க மாட்டான் என்ற ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமியின் விளக்கம் இனிமையானது.

ராவணன் செய்த தீமைக்கான பலன், இப்பிறவிலேயே கிடைத்துவிட்டது என்று புலம்புகின்றவர்களாய், **இரக்கம் இன்றி எம்கோன் செய்த தீமை, இம்மையே எமக்கு எய்திற்றுக் காணீர்** என்றனர் அரக்கர் (இம்மை = இப்பிறப்பு, காணீர் = அறிவீர்).

நல்வினையாய் இருந்தாலும் தீவினையாய் இருந்தாலும் அளவுகடந்து செய்யப் பட்டால் அவை களின் பலன் அந்தப் பிறவிலேயே அநுபவிக்கக் கூடியது என்பது கருத்து. அத்தகைய ராவணன் செய்த தீமைகளை விரிவாகச் சொல்வதற்கும் அவர்களுக்கு விருப்பம் இல்லாமையால், அவைகளை இன்று

விரிவாகச் சொல்லி என்ன பயன் என்பார்களாய், **பரக்க யாம் இன்று உரைத்து என்?** என்றனர் (பரக்க = விரிவாக). பின்பு, தான் செய்த குற்றத்தின் பயனைத் தானே அநுபவித்து விட்டான் என்று கூறுவார்களாய், **இராவணன் பட்டனன்** (பட்டனன் = இறந்தனன்) என்றனர்.

இவ்வாறு அரக்கர்கள், ராமனையும், அவன் கூட்டத்தாரையும் நோக்கிக் கூறியது, ராவணனின் மரணத்திற்கு முன்போ? அல்லது பின்போ? என்ற ஐயப்பாடு நமக்கும் தோன்றலாம். ஏனெனில், பின்னால், இத்திருமொழியின் ஏழாவது பாசுரத்தில், ''குற்றம் இல்லாத எங்களை விட்டுவிட்டுக் குற்றம் உடைய ராவணனையே கொல்லவேண்டும்'' என்று அரக்கர் வேண்டுவதாக வந்துள்ள காரணத்தால், ராவணன் இறப்பதற்கு முன்பே, அவன் அடைந்து வருகின்ற தோல்விகளை நினைத்து, இவ்வாறு கூறியதாகவும் கருதலாம்.

அப்படி இருக்குமானால், இப்பாசுரத்தில், **இராவணன் பட்டனன்** என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? என்ற கேள்வி எழுகின்றது. அவன் செய்த குற்றத்தின் கடுமையை நினைத்து, அவனுக்கு மரணம் நிச்சயம் என்று முடிவு செய்து, இனிமேல் நடக்க இருப்பதை இப்போதே நடந்து விட்டதாகச் சொல்லி இருக்கலாம்.

இது போன்றே, அசோகவனத்தை அழிக்கின்ற அநுமன், தன்னை எதிர்த்த அரக்கர்களை நோக்கி, ''இக்ஷ்வாகு வம்சத்தின் தலைவனான மஹாத்மாவுடன் (ராமனுடன்) பகை கொண்ட காரணத்தால், இனி இந்த லங்கை மாநகரும் இல்லை, நீங்களும் இல்லை, ராவணனும் இல்லை'' என்று வால்மீகியின் ஸுந்தர காண்டத்தில் கூறும், இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. ராவணனின் மரணத்தை முன் கூட்டியே நிச்சயமாகக் காட்டிக் கூறுவதும் நோக்கத்தக்கது.

அது மட்டும் அல்லாமல், ராவணனைச் சார்ந்திருந்த கும்பகர்ணன், இந்த்ரஜித்தன் போன்ற மாவீரர்கள், களத்தில் இறந்ததை இவர்கள் பார்த்தவர்கள் ஆதலால், அந்த அநுபவ அடிப்படையில், ராவணன் மரணமும் நிச்சயம் என்று நினைத்தும் கூறி இருக்கலாம். மேலும் எம்பெருமானின் வெற்றியில் ஆழ்வார் கொண்ட உறுதியும், அரக்கர் வாக்காகப் பேசும் நிலையில், இவ்வாறு வெளிப்பட்டிருக்கலாம் என்று நினைக்கவும் இடம் உண்டு.

இவ்வாறு புலம்பிய அரக்கர் மேலும் கூறுவாராய், ''எங்கள் தரப்பில் பெரும்பான்மையார் அழிந்து விட்ட காரணத்தால், இச் செய்திகளை எல்லாம், நாங்கள் இனிமேல் யாருக்குச் சொல்ல முடியும்?' என்பாராய், **இனி யாவர்க்கு உரைக்கோம்?** என்றனர். மேலும் ராமனையும், அவனைச் சார்ந்தோரையும் நோக்கிச் சொல்லத் தொடங்கியவர்களாய், 'பெருமக்களே! எங்கள் அரக்கர் கூட்டத்தின் தற்காலப் பரிதாப நிலையைப் பாருங்கள்' என்று சொல்லுகின்றவர்களாய், **அரக்கர் ஆட அழைப்பார் இல்லை** என்றனர். அரக்கரில், ஆடு போலக் கூப்பிடக் கடவார் ஒருவரும் இல்லை என்று கூறினர் போலும்.

இக்கருத்து, பட்டருக்கு உரியது என்று நஞ்சீயர் அருளிச் செய்வர். இதனை நஞ்சீயர் வாயிலாகக் கேட்ட நம்பிள்ளை ''ஆடு'' என்ற சொல்லுக்கு, ''ஒரு விலங்கு'' என்றே பொருள் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லாத காரணத்தால், ''ஆடு'' என்ற சொல்லுக்கு அமைந்த வேறொரு பொருளான, ''வெற்றி'' என்பதைக் கொள்ளலாம் என்றும், அவ்வாறு கொண்டால், வெற்றி பெற வாருங்கள் என்று ''அழைப்பதற்கு ஒருவரும் இல்லை'' என்ற பொருளில் ''அரக்கர் ஆட அழைப்பார் இல்லை'' என்று கூறி இருக்கலாம் என்றும் சொன்னாராம். அதனைக் கேட்ட நஞ்சீயர், ''இதுவன்றோ பொருள்!'' என்று பாராட்டி ஏற்றுக் கொண்டதாக வரலாறு.

இவ்விடத்தில், சோழன் போரவை கோப்பெரு நற்கிள்ளி என்ற மன்னனை, நக்கண்ணையார் என்ற பெண்பாற்புலவர் பாடியதாக உள்ள புறநானூற்றுப் பாடலில், **ஆடு ஆடு என்ப ஒரு சாரோரே; ஆடு அன்று என்ப ஒரு சாரோரே; யான் கண்டனன் அவன் ஆடு ஆகுதலே** என்ற பகுதியில், ஆடு என்ற சொல் வெற்றி என்ற பொருளில் வந்திருப்பது இங்கே கருதத்தக்கது. இவ்வாறு தங்கள் நிலை குறித்துப் புலம்பும் அரக்கர் முடிவாக, ''நாங்கள் பயத்திற்கு ஆட்பட்டு விட்டோம்'' என்பாராய், **நாங்கள் அஞ்சினோம்** என்று கூறி, தோற்று ஆடும் கூத்தினை ஒலிக் குறிப்பால் காட்டுபவர்களாய், தடம் பொங்கத்தம் பொங்கோ என்றனர். இதனை முழுமையாகக் காட்டும் பாசுரம் இது.

**இரக்கம் இன்றி எம் கோன் செய்த தீமை**
**இம்மையே எமக்கு எய்திற்றுக் காணீர்**
**பரக்க யாம் இன்று உரைத்து என்? இராவணன்**
**பட்டனன் இனியாவர்க்கு உரைக்கோம்?**
**குரக்கு நாயகர்காள்! இளங்கோவே!**
**கோலவல்வில் இராமபிரானே!**
**அரக்கர் ஆடு அழைப்பார் இல்லை நாங்கள்**
**அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ!**

இவ்வாறு, அருளிச் செயல் உலகில் யாரும் அடையாத தனி அநுபவத்தைக் கலியன் பெற்று, நமக்கும் பாசுர வாயிலாக அதனை அருளினார். கலியனே அரக்கர் நிலையை ஏற்றுப் பிழை பொறுக்க வேண்டியதால், அரக்கரும் நமக்கு நல்லவர்களாகத் தோன்றத் தொடங்கி விட்டனர் என்பதுதான் அருளிச் செயலால் நாம் பெற்ற அநுபவம் ஆகும். எம்பெருமானிடம் சரண் அடைய, அரக்கர் நிலையையும் ஏற்கத் துணிந்த, அருள் மாரியின் திருவுள்ளம் நம்மை நெகிழச் செய்கிறது.

# ஸ்ரீ தேஹளீச ஸ்துதியில் முதலாழ்வார்கள்

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

ஆழ்வார்களில் முதலாவார் மூவர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என இவர்களின் திருநாமங்கள். பொய்கையாழ்வார் **காஸாரயோகி, ஸரோயோகி, பொய்கைமுனி, பொய்கைப்பிரான்** என்றும் அழைக்கப்படுகின்றார். பூத்தாழ்வார் **பூதம், பூதத்தார்** என்றும் அழைக்கப்படுகின்றார். பேயாழ்வார் **தமிழ்த்தலைவன், மஹதாஹ்வயர்** என்றும் அழைக்கப்படுகின்றார். திருமழிசையாழ்வார் பேயாழ்வாரை அடைந்து ஸம்ப்ரதாயார்த்தங்களை அடைந்தவர் என்பது இவருக்குள்ள தனி ஏற்றமாகும். ஸ்வாமி நம்மாழ்வார் இம்மூவரையும் **இன்கவிபாடும் பரமகவிகள்** என்று குறிப்பிடுகின்றார். **செந்தமிழ்பாடுவார்** என்று நாலுகவிப்பெருமாளாம் ஸ்ரீகலியன் குறிப்பிடுகின்றார்.

இவர்கள் வேதாங்கமான வ்யாகரண சாஸ்த்ரத்தை பாணினி, பதஞ்சலி மற்றும் வரருசி என்னும் மூவர் வளர்த்தாப்போலே ஸ்ரீவைஷ்ணவத்தை முதலில் வளர்த்தவர்கள். மூன்று திருவந்தாதிகளாலே ஒரு வைணவன் அறியவேண்டிய அனைத்தையும் சுருங்க அருளிச்செய்தவர்கள். இவர்கள் முறையே துலாமாதத்து ச்ரவணம், அவிட்டம் மற்றும் சதயத்தில் அவதரித்தவர்கள். இவர்கள் அவதாரம் த்வாபரயுகத்திலாகும். இக்கலியுகத்தில் நாதமுனி, யாமுனமுனி மற்றும் இராமானுசமுனி என்னும் மூவர் முதலாழ்வாரின் கொள்கையைப் பரக்கப் பேசியவர்கள். முதலாழ்வார்கள் மூவரும் திருக்கோவலூரில் ஒரு இடைகழியில் மாலிடைநெருக்க, தேனும் பாலும் அமுதுமாய மூன்று திருவந்தாதியைத் தந்தவர்கள். இவர்களைப் பற்றி **சந்தமிகுதமிழ்மறையோர்** தம் ஸ்ரீஸூக்திகளிலே ஆங்காங்கே அருளிச்செய்வர். **பாட்டுக்குரிய பழையவர், கவீந்த்ரர்கள்** எனப் புகழ்வர். அவர் அருளிச்செய்துள்ள **ஸ்ரீதேஹளீசஸ்துதி** என்னும் திவ்யஸ்தோத்திரத்தில் இம்மூவரைப் புகழ்ந்துள்ளதைச் சுருக்கமாக இவ்விதழில் அனுபவிப்போம்.

*தீபேந கேநசித் அசீதருசா நிசீதே*
*ஸ்நேஹோபபந்ந பரிசுத்தகுணார்ப்பிதேந|*
*தஹ்ராவகாசநிபிடம் தத்ருசுர்பவந்தம்*
*ஸ்வாத்யாயயோகநயநா: சுசய: கவீந்த்ரா:|| [6]*

''வேத்தையும் யோகத்தையும் இருகண்ணாய்ப் பெற்ற மனத்தூய்மை மிக்க முதலாழ்வார்கள் திருக்கோவலூரில் இடைகழியில் கூடினர். இரவில் குளிர்ந்தகிரணங்களையுடைய சந்திரனின் ஒளியால் மக்கள் பொருட்களைப் பார்ப்பர். ஆனால் நிலவில்லா நல்லிருளில் ஒரு அற்புததீபமேற்றி உன்னைக் கண்டனர். ஆராக்காதல் என்ற நெய்யொடு கூடிய தூயஸத்துவகுணம் என்னும் திரியால் உண்டாக்கப்பட்ட தீபத்தால் மிகச்சிறிய இடைகழியில் நெருக்கிக்கொண்டிருந்த உன்னைக் காணலுற்றனர்'' என்பது இந்த ச்லோகத்தின் பொருளாகும். அவர்களின் பாசுரங்களாகிற தீபம் இன்றுவரை நம்முடைய அகவிருளைப் போக்கிக்கொண்டு அணையாவிளக்காய் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றது.

*காஸாரபூர்வகவிமுக்யவிமர்த்தஜந்மா*
*பண்ணாதடேக்ஷுஸுபகஸ்ய ரஸோ பஹுஸ்தே|*
*த்வத்பாதபத்மமதுநி த்வதநந்யபோக்யே*
*நூநம் ஸமாச்ரயதி நூதநசர்க்கராத்வம்|| [7]*

இந்த ச்லோகத்தின் பொருள், ''பொய்கையாழ்வார் முதலான சிறந்தகவிகளாம் முதலாழ்வார்களின் நெருக்கத்தால் உண்டான பெண்ணையாற்றின் கரையில் தோன்றிய செழித்த கரும்புபோல் இனியனான உன்னுடைய மிக்க நீர்மைகுணம் உன்னைத்தவிர வேறொன்றை வேண்டாத பரமைகாந்திகளுக்கு அனுபவிக்க உகந்த திருவடித்தாமரையின் தேனில் சர்க்கரையின் தன்மையை அடைகின்றது, இது திண்ணம்'' என்பது ஆகும்.

பெரியதிருமொழியில் இரண்டாம் பத்து பத்தாம் திருமொழி நான்காம் பாசுரத்தில் **ஆங்கரும்பிக்கண்ணீர் சோர்ந்து அன்புகூரும் அடியவர்கட்கு ஆரமுதமானான் தன்னை** என்ற சொற்றொடரால் இம்மூன்று ஆழ்வார்களைக் கலியன் குறிப்பிட்டுள்ளார் என்பது ஸ்வாமி தேசிகனின் இந்த ச்லோகத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே பாசுரத்தின் கடையடியில் தீங்கரும்பைப் (இனிய கரும்பு) பற்றி ஆழ்வார் பேசுகின்றார். துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணையின் கரையோரத்தில் வளந்த தீங்கரும்பு அங்கு எழுந்தருளியிருக்கும் ஆயனார் ஆவர். ஆலையில் கரும்பை நெருக்கிப் பிழிவதுபோலே ஆயனார் என்ற அக்கரும்பும் மூன்று ஆழ்வார்கள் என்ற பிரள் கொண்ட ஆலையிலே நெருக்கிப் பிழியப்பட்டது. அப்போது அதிலிருந்து பகவானின் இனிய நீர்மை குணம் என்னும் கருப் பஞ்சாறு வெளிப்பட்டது. அது பின்பு உறைந்து உயர்ந்த சர்க்கரையாயிற்று. தேனே மலரும் திருப்பாதத்தை பரமைகாந்திகள் அனுபவிக்கும்போது அத்துடன் சர்க்கரையாய் நீர்மையும் சேர்ந்து அப்பரமைகாந்திகளின் அனுபவத்தை அதிகமாக்குகின்றது என்பது இந்த ச்லோகத்தால் காட்டப்பட்ட சீரிய பொருளாகும்.

பதினொன்றாம் ச்லோகம்,

*பிக்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரதமாச்ரம் த்வம்*
*க்ருஷ்ணாஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா:|*

*வ்யக்தாக்ருதே: தவ ஸமீக்ஷ்ய புஜாந்தரே தாம்*
*த்வாமேவ கோபநகரீச! ஜநா விதுஸ்த்வாம்|| [11]*

''திருக்கோவலூரானே! நீ பிச்சை எடுப்பதற்கேற்ற குறள் பிரமசாரியாய், அந்த ஆச்ரமத்தை வெளிப்படுத்த மான்கொண்டதோல்மார்வனாய் முப்புரிநூலுடன் கூடிய மான்தோலை மஹாலக்ஷ்மீக்குத் திரையாக்கினாய்! பின்பு அங்கையால் நீரேற்று திரிவிக்ரமனாய் வளர்ந்தபோது உன் திருமார்வில் அப்பெரியபிராட்டியைக் கண்டு உன்னை பரமபுருஷன் என மக்கள் அறிந்துகொண்டனர்'' என்பது இந்த ச்லோகத்தின் பொருளாகும். இந்த ச்லோகத்தில் முதலாழ்வார்களைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லையே என எண்ணலாம், ஆனால் வடமொழிவேதம் இலக்குமியை இட்டே பரமபுருஷனை அடையாளம் காட்டும். மாவலிக்கு வாமனன் மஹாலக்ஷ்மியை மறைத்தது போலன்றிக்கே த்ரிவிக்ரமனாய் மக்களுக்கு மஹாலக்ஷ்மியைக் காட்டியது போலே நீ முதலாழ்வார்களுக்கு, **திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்** என்று பேயாழ்வார் பாசுரமிடும்படிக் காட்டினாய்! அதனால் தமிழ்வேதமும் பரதத்வநிர்தாரணத்தை லக்ஷ்மீஸம்பந்தத்தாலேயே காட்டின என்பதும் இந்த ச்லோகத்தில் தொனிக்கின்ற பொருளாகின்றது.



*ஸ்வச்சந்தவிக்ரமஸமுந்நமிதாத் அமுஷ்மாத்*
*ஸ்ரோதஸ்த்ரயம் யதபவத் தவ பாதபத்மாத் ।*
*வேதாளபூதஸரஸா அபதிச்ய வாசம்*
*ப்ராயேண தத் ப்ரஸவபூமிம் அவாப பூய: ।। [16]*

''திருக்கோவல் எம்பெருமானே! முன்பு உன் விருப்பப்படி உலகை அளக்க மேலே தூக்கிய இந்த உன் திருவடிகளில் இருந்து தோன்றிய கங்கை மூன்று வெள்ளப்பெருக்காய் பிரிந்து தேவ, மநுஷ்ய, பாதாள லோகங்களை அடைந்தது. அம்மூன்று வெள்ளப்பெருக்கு பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார் ஆகிய மூவரின் முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதி என்ற பெயருடன் தான் பிறந்த இடமான எம்பெருமான் திருவடியையே (தாங்கள் தோன்றிய இடத்தையே) மீண்டும் வந்தடைந்தன'' என்று இதன் பொருளாகும். இதனால் கங்கைபோல் புனிதமானவை திருவந்தாதிகள்; வெள்ளப்பெருக்குபோல் அநுபவபரீவாஹமாய் உண்டானவை; எம்பெருமானின் திருவடிகளைப் போற்றுபவை; இடைவிடாமல் பெருகும் கங்கையின் ப்ரவாஹம் போல் ஒரே பாவகையான வெண்பாவில் அந்தாதியாக அமைந்துள்ளவை முதலிய விசேஷார்த்தங்கள் ஸூசிப்பிக்கப்பட்டன. இது தன்னைப் பன்னி உரைக்குங்கால் பாரதமாம்; அது நிற்க!

*க்ரீடாபரேண பவதா விஹிதோபரோதாந்*
*ஆராதகாந் அநுபரோதம் உதஞ்சயிஷ்யந்|*
*தாம்ரேண பாதநகரேண ததாண்டமத்யே*
*கண்டாபதம் கமபி நூநமவர்த்தயஸ்த்வம்|| [17]*

''திருக்கோவலூரானே! அடியார்களுடன் திருவிளையாடல் நிகழ்த்துவதில் நோக்குள்ள உன்னால் நெருக்கப்பட்டவர்களாய் உன்னைப் பூசித்த முதலாழ்வார்களை எத்தடையுமின்றி ஸ்ரீவைகுண்டத்துக்கு அழைத்துச் செல்ல உன்னுடைய சிவந்த திருவடிநகத்தால் (நகத்தின் ஒளி நெடுந்தூரம் வீசியதால்) அந்நாளில் அண்டத்துக்கு நடுவில் சீரிய ராஜமார்க்கத்தை நீ உண்டாக்கினாய் போலும்'' என்று இந்த ச்லோகத்தில் உத்ப்ரேக்ஷிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

மற்றும் பற்பல ச்லோகங்களில் ஸ்வாமி முதலாழ்வார்களின் பெருமையை ஸ்ரீதேஹளீச ஸ்துதியில் குறிப்பிட்டுள்ளார். தனக்குக் கவிபாட தைர்யம் வந்ததற்குக் காரணம் முதலாழ்வார்களை நெருக்கிக் கவிகொண்ட வ்ருத்தாந்தமே என்பதை இரண்டாம் ச்லோகத்தில் அருளிச்செய்துள்ளார். பதிமூன்றாம் ச்லோகத்தில் திருக்கோவலூர் ஆயனாரை **பக்தோபரோதஸஹ!** (முதலாழ்வார்களாம் பக்தர்களின் நெருக்கத்தை ஏற்றுக்கொண்டவனே!) என்று விளித்ததால் முதலாழ்வார்களின் திருமேனி ஸம்பந்தத்தை பகவான் தனக்கு ஒரு பெரும்பேறாக எண்ணியதை ஸூசிப்பித்தார்.

**மண்ணை இருந்து துழாவி வாமனன் மண் இது** என்று நம்மாழ்வார் என்றோ வாமனால் அளக்கப்பட்ட மண்மேல் அபிமானம் கொண்டாப்போலே, த்ரிவிக்ரமனும் முதலாழ்வார்கள் திருமேனி ஸம்பந்தத்தை நம் பெற்றது இம்மண்ணிலே; அவர்களுடைய ஆறு திருவடிகள் பட்டது இவ்விடைகழியிலே என்று இன்றளவும் திருக்கோவலூரை அபிமானித்து அவ்விடைகழியிலே நித்யவாஸம் பண்ணுவதும் இதனால் ஸூசிப்பிக்கப்பட்டது.

ஸ்வாமி நிகமாந்ததேசிகனின் ஆழ்வார் அனுபவம் அளப்பரியது. அதில் ஸ்ரீதேஹளீச ஸ்துதியில் இருந்து முதலாழ்வார் விஷயமாக சிலவற்றைச் சிறிதளவு விண்ணப்பித்து அடியேன் தன்யன் ஆனேன்.





## தீபாவளி உத்ஸவம்







ஸ்ரீ:





## ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்









## பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்











## பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்









**பேயாழ்வார் உத்ஸவம்**









ஸ்ரீ:





## பேயாழ்வார் திருநக்ஷத்ரம்











பேயாழ்வார் திருநக்ஷத்ரம்







பேயாழ்வார் திருநக்ஷத்ரம்









பேயாழ்வார் திருநக்ஷத்ரம்



ஸ்ரீ:




பேயாழ்வார் திருநக்ஷத்ரம்













பஞ்சபர்வ உத்ஸவங்கள்







ஸ்ரீ:

கண்ணுக்கினியன



வெள்ளிக்கிழமை உத்ஸவம்



ஸ்வாமி தேசிகன் விடாயாற்றி உத்ஸவம்

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

**ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன்** (பதிவு)
**மயிலாப்பூர், சென்னை - 600004**

**2025 - 2026 ஆம் ஆண்டிற்கான**
**வேத, திவ்யப்ரபந்த, தேசிக ஸ்தோத்ர போட்டிகளுக்கான பாடப்பகுதிகள்**

**இடம்** - ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை - 600004
தேதி - **நவம்பர் 23, 2025**

| | |
|---|---|
| **யஜுர் வேதம் (க்ருஷ்ண யஜுர் வேதம்)** | **7 முதல் 10 வயது வரை**<br>பஞ்ச ஸூக்தங்கள் (வைஷ்ணவ பாடம்) |
| | **11 முதல் 13 வயது வரை**<br>தைத்ரீயோபநிஷத் (பூர்த்தியாக) (த்ராவிட பாடம்)<br>(2 ப்ரஸ்னங்களும் - ஶந்நோமித்ர & அம்பஸ்யபாரே) |
| | **13 முதல் 15 வயது வரை**<br>காடகம் - 3 ப்ரஸ்னங்களும் (பூர்த்தியாக) |
| **ஸாம வேதம் (கௌதும ஷாகை)** | **7 முதல் 12 வயது வரை**<br>புருஷ ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம் மற்றும் உபசார சாமங்கள் |

வேத போட்டிகளுக்கான நிபந்தனைகள்:

1. **ஆண் குழந்தைகளுக்கு மட்டும்.**
2. **யஜுர் வேதம் - ஒரு குழந்தை ஒரு பகுதியில் / குழுவில் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.**

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

**ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன்** (பதிவு)
**மயிலாப்பூர், சென்னை - 600004**

**2025 - 26 ஆம் ஆண்டிற்கான**
**வேத, திவ்யப்ரபந்த, தேசிக ஸ்தோத்ர போட்டிகளுக்கான பாடப்பகுதிகள்**

**இடம்** - ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை - 600004
தேதி - **நவம்பர் 23, 2025**

| |
|---|
| **5 முதல் 8 வயது வரை**<br>❖ **திவ்யப்ரபந்தம்** - பூச்சூட்டல், காப்பிடல் மற்றும் சென்னியோங்கு<br>❖ **தேசிக ஸ்தோத்ரம்** - அஷ்டபுஜாஷ்டகம் மற்றும் பரமார்த்த ஸ்துதி |
| **9 முதல் 12 வயது வரை**<br>❖ **திவ்யப்ரபந்தம்** - மூன்றாம் திருவந்தாதி<br>❖ **தேசிக ஸ்தோத்ரம்** - தேஹளீச ஸ்துதி |
| **13 முதல் 16 வயது வரை**<br>❖ **திவ்யப்ரபந்தம்** - பெருமாள் திருமொழி<br>❖ ஸ்தோத்ரம் - ஸ்தோத்ர ரத்னம் |
| **பட்டிமன்றம் - 11 முதல் 20 வயது வரை**<br>❖ பெரியாழ்வார் மூழ்கியது க்ருஷ்ணானுபவமா ? ராமானுபவமா ? |

**தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் - 97911 93020 / 93800 18400 / 81224 97914**

ஸ்ரீ:

# ஸ்ரீமத் ரஹஸ்ய-த்ரய ஸாரத்தின் மங்களாசரண ச்லோகங்கள்

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

*1] குருப்ய: தத் குருப்யச்ச நமோவாகமதீமஹே|*
*வ்ருணீமஹே ச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம்பதீ||*

ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்களின் நித்ய, நைமித்திக, காம்ய கர்மாக்களின் ஸங்கல்பத்தில் இந்த ச்லோகத்தை அனுஸந்திக்கிறார்கள். குருபரம்பராஸ்மரணம் தத்ததாசார்ய பரம்பரைப் படி இருப்பினும் இந்த ச்லோகானுஸந்தானமானது அனைவரையும் ஸ்மரித்த பலனை வழங்க வல்லதாயுள்ளது.

**தம்பதீ** சப்தமானது இந்த க்ரந்தத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ளது.

திவ்ய தம்பதியின் கடாக்ஷம் ஸர்வ காலங்களிலும் அவச்யம்.

ஸ்ரீ பெரியாழ்வார் திருமொழிக்கு ஏரணி பல்லாண்டு முதல் பாட்டு என்பது போல், குருபரம்பரா ஸாரம், ஸ்ரீமத் ரஹஸ்ய-த்ரய ஸாரத்தின் ஆரம்பம்.

மங்களாசரணத்தில் குருக்களை ஸ்மரிப்பது சிஷ்ய லக்ஷணம்.

குரு சப்த ப்ரயோகத்தில் குருச்ச குருச்ச குருச்ச குரவ:, தேஷாம் குரவ: என்று விக்ரஹம் கொள்ளும் போது ஸ்வாசார்ய ப்ரப்ருதி- லக்ஷ்மீநாத பர்யந்த குருபரம்பராஸ்மரணம் என தெளிகிறது.

இவ்விடத்தில் ஸ ச ஆசார்ய வம்ச: க்ஞேய: ஆசார்யாணாம் அஸாவஸௌ அவித்யாபகவத்த: என்ற விசேஷ அர்த்தத்தைக் கொள்வது.

**நம:** என்பது அஞ்ஜலியைக் குறித்தாலும், ஸக்ருத் உச்சரிதத்தாலே, இங்கு ஸேவிப்பதைக் குறிக்கறிது எனக் கொள்க.

கண்ணன் கழல் தொழ, கூப்பிய கையின் பெருமையைக் கூறிய வண்ணம் அஞ்ஜலியாகக் கொண்டாலும் அதை ஸாஷ்டாங்க நமஸ்காரங்களாக ஏற்கின்றனர் ஆசார்ய பரம்பரையிலுள்ள வள்ளல்கள்.

**நம உக்திம் வதாம:** என்றில்லாமல் (தாத்வந்தரம்), அதீமஹே என்பது உக்தி ரூப மங்களத்திற்கு பூயஸ்த்வம் ஏற்படுவதற்கு.

**நம உக்திம்** ஆவ்ருத்திக்காக அதீமஹே என்று ப்ரயோகம்.

**வ்ருணீமஹே** என்பது வரித்தல். அதாவது தான் அடையும் தஞ்ஜம்/ அடைக்கலம்- இவற்றின் பொறுப்பாளர்களை வரித்தல்.

**தத்ராத்யௌ** இங்கு ஸமுதாய – நிரூபித – ப்ரதம - கடகதாவந்தௌ அர்த்தத்தைக் கொள்வதால், பெருமாளுக்கு முதல் கடகத்வம்; பிராட்டிக்கு இரண்டாவது கடகத்வம் என்று உண்டாகி, அர்த்த பாதிதம் ஆகிறது. இப்படியிருக்க, ஜகத் ஜனகத்வ சேஷித்வ- சரண்யத்வ ப்ராப்யத்வாதி ஸாம்யாத் இத்யாதிகளாலே பிராட்டிக்கும் ஜகஜ்ஜனகத்வத்தைக் கூறுவதால் இவ்வர்த்தம் பாதிதம் ஆகாது.

**தம்பதீ ஜகதாம் பதீ** என்றதால் - பதிம் வி சவஸ்ய ஆத்மேச்வரம் - திவ்ய தம்பதியின் ஈச்வரத்வம் இங்கு புகழப்படுகிறது. இருவரும் ஏக மனஸ்கர்களாய், ததிங்கித பராதீனனாகவே, பகவான் ஜகத்தின் வ்யாபாரத்தைச் செய்வதால் பாதகத்திற்கு இங்கு இடமில்லை.

*2] ஆபகவத்த: ப்ரதிதாம் அனகாம் ஆசார்ய*
*ஸந்ததிம் வந்தே|*
*மனஸி மம யத் ப்ரஸாதாத் வஸதி ரஹஸ்ய*
*த்ரயஸ்ய ஸார: அயம்||*

**ஆபகவத்த:** - லக்ஷ்மீநாதன் ஆரம்பமாக என்று கொள்வது.

**ப்ரதிதாம்** - (கல்யாண) குணங்களால் ப்ரஸித்தையான.

**அனகாம் –** தோஷமற்றவர்களான.

அதாவது எப்படி ஸ்ரீஹரியானவன் தோஷங்கள் இல்லாதவனோ அவ்வாறே மற்ற ஆசார்யர்களும் தோஷமற்றவர்கள் என்று மனத்தில் நிறுத்துக. கல்யாணைகதானத்வ விஷயங்களில் கடகர் களெல்லாம் பகவத் துல்யர்கள் என தெளிவுறுக.

**ஆசார்ய ஸந்ததிம் வந்தே -** பரமபரம் பரனைப் பற்றென்று பற்றும் ஸத்துக்களும், அவர்கள்தம் திருவடிக்களும், திருமுடிக்களும் என்றவாரிருக்கும் அவிச்சின்ன பரம்பரைக்கு நமஸ்காரங்கள்.

**மம, மனஸி, வஸதி, யத் ப்ரஸாதாத் -** தொழுதெழு என் மனனே என்ற குருகையர்கோனின்

அருளிச்செயலை ஒத்திருக்கிறது. இங்கே ஆசார்ய அனுக்ரஹத்தினால் தனக்குக் கிட்டிய அஷ்டாக்ஷர அந்தஸ்தமான ஸமஸ்த ரஹஸ்ய அர்த்தங்களும், அத்யந்த லகிஷ்டமாக தன் மனதில் வாஸம்செய்கின்றன எனப் பூரிக்கிறார் ஸ்ரீ தூப்புல் குலபதி.

**ரஹஸ்ய த்ரய ஸார: அயம் -** ஸாரபூதமான அர்த்த பரமே ஸார சப்தார்த்தம். ப்ரதி ரஹஸ்யத்தின் அர்த்தங்களே கடல் போன்றுள்ளதால் ஸார: என்று ஏகவசனமிங்கே. ரஹஸ்யதாதிசய பரமாக அயம் சப்தம்.

*3] கர்ம ப்ரஹ்மாத்மகே சாஸ்த்ரே கௌதஸ்குத நிவர்தகான் |*
*வந்தே ஹஸ்திகிரீசஸ்ய வீதீ சோதக கிங்கரான்||*

தர்ம ஜிக்ஞாஸத்தில் உபக்ரமித்து – அனாவ்ருத்தி: சப்தாத் என முடியும் மீமாம்ஸா சாஸ்த்ரமானது கற்றுத் தேர்ந்தவர்களால் ஆராயப் படுகிறது. இதில் கர்ம காண்டங்களில் கூறப்படும் யாகாதிகளும், உபநிஷத்துக்களில் போற்றப்படும் ப்ரஹ்மத்தைப் பற்றிய லக்ஷணங்களும் அடக்கம். ஆகவே கர்ம - ப்ரஹ்ம மீமாம்ஸைகளை குறித்து இந்த சப்தம்.

**(வக்ஷ்யதி ச கர்ம ப்ரஹ்ம மீமாம்ஸயோரைக சாஸ்த்ர்யம்** என ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளம் இதர மதங்களில் பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரம், உத்தர மீமாம்ஸா சாஸ்த்ர்மென விபாகங்கள். ஆனால் ஸ்ரீ உடையவர் திருவுள்ளப்படி நமக்கு கர்ம - ப்ரஹ்ம மீமாம்ஸைகள் இரண்டுமே வாக்ய சாஸ்த்ரம் என வழங்கப்படும் மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் அடக்கம்).

**கௌதஸ்குத நிவர்தகான் -** குத: ? குத:? என்று ஆக்ஷேபம் பண்ணும் வாதிகளை இருக்குமிட மில்லாமல் செய்பவருமான

**ஹஸ்திகிரீசஸ்ய -** நம்மத்திகிரித் திருமாலின்

**வீதீ சோதக கிங்கரான் -** எப்படி திருவீதி உத்ஸவ பூர்வவத் அவ்வீதிகளை சுத்தம் செய்கிறார்களோ, அவ்வாறே குத்ருஷ்டிகளை (பரமத வாதங்களை) வென்று விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனம் செய்யும் அப்புள்ளார், ஸ்ரீ பாஷ்யகாரர் போன்ற ஆசார்யர்களுக்கு நமஸ்காரங்கள்.

பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகள் பண்டை மறைக்குப் பகையென நிற்கும் குப்பைகளானப் பரமதங்களை அகற்றும் மார்ஜனிக்கள். ஆசார்ய கிங்கரர்கள் செய்யும் இந்த கைங்கர்யமானது பரப்ரஹ்மமான ஸ்ரீ பேரருளாளன் மனமுகந்து திருவீதீ உத்ஸவம் கண்டருளுவதற்கு அவச்யமாகிறது.

இங்கு வீதீ சப்தத்தால் அர்த்த அனுசாஸன பாகார்த்தம் ஸூசிதமாகிறது.

*4] மணிவர இவ சௌரே: நித்ய ஹ்ருத்ய: அபி ஜீவ:*
*கலுஷமதிரவிந்தன் கிங்கரத்வாதி ராஜ்யம்|*
*விதிபரிணதி பேதாத் வீக்ஷித: தேன காலே*
*குருபரிஷத் உபக்ஞம் ப்ராப்ய கோபாயதி ஸ்வம்||*

**மணிவர: -** கௌஸ்துபத்தை உதாஹரணமாகக் காட்டுவது. இந்த த்ருஷ்டாந்தத்தால்.

**சௌரே: நித்ய ஹ்ருத்ய : கலுஷ மதி:** நிர்மலத்வமான, ஞான ரூபமான, அதிசயமான, ப்ரகாசமான பரப்ரஹ்மமான ஸ்ரீமந்நாராயணன் உள்ளான். அவனுக்கு நித்ய தாஸனாய் இருக்கும் கைங்கர்யத்தை இத்தனை காலம் ஜீவன் இழந்ததின் காரணமென்னவோ? மதிக்கு காலுஷ்யமாவது; தேஹ ஆத்ம விஷயகத்வமும் ஸ்வதந்த்ர ஆத்ம விஷயகத்வமுமான ப்ரவாஹதமான அநாதிகள் என்று. ஆதலால்,

**கிங்கரத்வாதி ராஜ்யம் -** கர்ம உபாதிகமான கைங்கர்யம், புருஷார்த்தமில்லை எனத் தோன்றினாலும், கர்மம் கழிந்தவனுக்குக் கிட்டும் பரமசேஷியான ஸர்வேச்வரனின் கைங்கர்யம், யௌவராஜ்ய துல்யம் என்றபடி.

**காலே விதி பரிணதி பேதாத் –** கர்மபரிபாக ஹேது பூதமான கால விசேஷத்தாலே (இதுவரை கிட்டாத) அனாதியான கர்மமானது, கார்யபூதமான பலனை அளிக்க வல்லது. இதில் அஜ்ஞாத, யாத்ருச்சிக, ப்ராஸங்கிக ஸுக்ருதங்களென பேதம்.

**தேன வீக்ஷித: -** ஜாத விசேஷத்தில் குலந்தரும் செல்வந்தந்திடும் என்றபடி பகவானால் கடாக்ஷிக்கப்பட்டவனாக உள்ள ஜீவன்.

**குருபரிஷத் உபக்ஞம் -** ப்ராப்தி க்ரியா விசேஷணம். பரிஷத் - கற்றோர்களின் கணம். குரு பரிஷத் - ஆசார்யன் ஆரம்பமாக உள்ளோரின் திரள். அவர்களால் செல்லப்பட்ட உபஜ்ஞும் இதுவரை அறியாதவை.

**ஸ்வம் ப்ராப்ய கோபாயதி -** உயர்ந்த கைங்கர்யத்தை தான் அடைதல். எப்படி? என்றால் அவிந்தன் என அதற்குக் கீழே அலாபம் சொல்லியிருப்பதால், இங்கு ப்ராப்தி சொல்வது உசிதம். ஸ்வம் சப்தம் ஸ்வாத்மாவை ரக்ஷணம் செய்யும் பொறுப்பை கோப்தாவிடம் ஒப்படைத்ததால் என்று பதில் ❊

# ஆதிமூலத்தின் ஆதார ச்ருதி

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

**தந்தம் மக்கள் அழுது சென்றால் தாய்மார் ஆவார் தரிக்ககில்லார்...**

(பெரியாழ்வார் திருமொழி 2-2-3)

''எந்தத் தாய் தான் தன் மக்கள் அழுவதைக் கண்டு அமைதியாய் இருப்பாள்'' என்பது இந்தப் பதங்களின் பொருள். சேதன வர்க்கத்தினைச் சேர்ந்த அன்னையருக்குப் பொருந்தும் இப்பதங்கள் பிராட்டி விஷயத்திலும் உண்மையே. ஜகன்மாதாவாகவே இருந்தாலும் பிராட்டியும் அன்னை தானே. அதனால் கர்மாநுகுணமாக சேதனர்கள் அடையும் துர்பலன்களுக்காக க்லேசம் கொள்ளும் பிராட்டி, எம்பெருமானிடம் புருஷகாரம் பண்ணி அவர்களை ரக்ஷிக்கிறாள்.

உதாஹரணமாக, கோயிலுக்குச் செல்லும் போது முதலில் ஜகந்மாதாவான பிராட்டியை ஸேவித்து விட்டு பின்னர் பெருமாளை ஸேவித்தால், அபராத சக்ரவர்த்திகளாகும் ஆச்ரிதர்களுக்காக அவனிடம் புருஷகாரம் பண்ணி, அவர்கள் மீது அவன் கொண்டுள்ள நிக்ரஹ ஸங்கல்பத்தினைப் போக்கி அவனது அநுக்ரஹத்தினை அவர்களுக்குப் பெற்றுத் தருகிறாள். ஆச்ரிதர்களுக்காகப் பிராட்டி செய்யும் சிபாரிசினை பரப்ரஹ்மமான பகவான் ஏற்பதற்கு தீர்க்கமான காரணம் ஒன்று உண்டு.

ப்ரஹ்மத்தில் ப்ரஹ்மமல்லாத ஒன்று வாஸம் பண்ண முடியாது. ப்ரஹ்மத்தில் பிராட்டி வாஸம் செய்கிறாள் என்பதை **ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே** என்ற பதங்களின் மூலம் ஸ்ரீபாஷ்யத்தில் நிஷ்கர்ஷிக்கிறார் ஸ்ரீபாஷ்யகாரர். ஆச்ரிதர்களுக்காகப் பிராட்டி செய்யும் சிபாரிசினைப் பரப்ரஹ்மமான பகவான் ஏற்பதற்குப் பிராட்டியும் பரப்ரஹ்ம ஸ்வரூபம் என்பது ப்ரதான காரணமாகிறது.

பிராட்டி பரப்ரஹ்ம ஸ்வரூபமே என்பதை நிஷ்கர்ஷிக்கும் மேலும் சில ப்ரமாணங்களில் அந்வயித்து, ஏக மிதுனமாகும் அந்த திவ்ய தம்பதியினரே பரப்ரஹ்மம் என்ற நம் மஹாவிச்வாஸத்திற்கு மேலும் வலு சேர்ப்போம்.

**ப்ரஹ்மத்தின் சக்தி பிராட்டியே**

தன்னை நோக்கிக் கடும் தவம் புரிந்த இந்த்ரனிடம் தான் யாரென்று சாக்ஷாத் பிராட்டியே தனது திருவாய் மலர்ந்தருளின ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ர ச்லோகங்கள் இவை.

*நிஸ்தரங்காம்ருதாம் போதிகல்பம் ஷாட்குண்ய முஜ்ஜ்வலம்|*
*ஏகம் தச்சித்தனம் சாந்தமுதயாஸ்தமயோஜ்ஜ்ஹிதம்* [2-10]||

*அப்ருதக்பூதசக்தித்வாத் ப்ரஹ்மாத்வைதம் ததுச்யதே|*
*தஸ்ய யா பரமா சக்திஜ்யோர்த்ஸ்நேவ ஹிமதீதிதே:||* [2-11]

*பரோக்ஷம் அபரோக்ஷம் ச ஜகதி ப்ரவிசிந்த்யதே |*
*நிரூந்மேஷே நிரூந்மேஷா ஸாஹம்தா பரமேச்வரீ ||* [2-20]

*க்ரோடீ க்ருத்யாகிலம் ஸர்வம் ப்ரஹ்மணி வ்யவதிஷ்டதே |*
*உந்மேஷஸ்தஸ்ய யோ நாம யதா சந்த்ரோதயே அம்புதே:||* [2-21]

*அஹம் நாராயணீ சக்தி: ஸிஸ்ருக்ஷாலக்ஷணா ததா|*
*நிமேஷஸ்தஸ்ய யோ நாம ஸம்ஹ்ருதௌ பரமாத்மந:||* [2-22]

*அஹம் நாராயணீ சக்தி: ஸுஷுப்ஷாலக்ஷணா ஹி ஸா |*
*ஸிஸ்ருக்ஷாயா மமோத்யந்த்யா தேவால்லக்ஷ்மீபதே: ஸ்வயம் ||* [2-23]

இவற்றின் ஸங்க்ரஹமான பொருளாவது: ஷட் குணங்களைக் கொண்ட பரப்ரஹ்மமானது அலைகள் ஏதுமில்லாது அமைதியாக இருக்கும் அமிர்தத்திலான ஸமுத்ரம் போன்றது. சுருங்காமலும் விரிவடையாமலும் ஜ்ஞானமயமாக உள்ள ப்ரஹ்மத்துடனே (அகலகில்லேன் இறையுமென்று) நான் எப்போதும் உள்ளேன். ஜீவர்களுக்கு தான் என்ற எண்ணத்தினை ஏற்படுத்துபவள் நானே. **ப்ரஹ்மத்தின் ஸங்கல்பத்தினால் அதனுள் உறைபவளான நான்** ப்ரஹ்மம் ச்ருஷ்டிக்கென தனது நேத்ரங்களைத் திறக்கும் காலத்தே அதன் ஸங்கல்பமாகவும் சக்தியாகவும் வெளிப்படுகிறேன். ஜகத்தினைத் தன்னுள் அடக்குவதற்கென ப்ரஹ்மம் தனது நேத்ரங்களை மூடும் போதிலும் **அதனுள் அடங்கிய சக்தியாக** இருப்பது நானே.

**ச்ருஷ்டியை பொலிவிப்பது பிராட்டியே**

*ச்ரியை ஸமஸ்த சிதசித் விதாந வ்யஸனம் ஹரே:*
*அங்கீகாரிபி: ஆலோகை: ஸார்த்த யந்த்யை க்ருத: அஞ்ஜலி:*
(பராசர பட்டர் - ஸ்ரீ குணரத்ன கோசம் - 1)

எம்பெருமான் ப்ரபஞ்சத்தைப் படைக்கும் காலத்தே, தனது ச்ருஷ்டியினால் ஏதேனும் ப்ரயோஜனம் உண்டா என்ற ஸந்தேஹம் அவனுக்கு

உண்டாகிறது. ஸந்தேஹத்தினால் அவனுக்கு வ்யஸனம் (சோர்வு) உண்டாக, மூன்று விஷயங்களைச் செய்து அவனது ஸந்தேஹத்தினை போக்குகிறாள் பிராட்டி.

**அங்கீகாரிபி:** - அவன் ச்ருஷ்டித்தவைகளை அங்கீகரிக்கிறாள்

**ஆலோகை:** - தனது நேத்ர அசைவினால் எம்பெருமானது படைப்புகளுக்குத் தனது ஸம்மதத்தினைத் தெரிவிக்கிறாள்

**ஸார்த்த யந்த்யை** - அவற்றைத் தனது கடாக்ஷத்தின் மூலம் ப்ரயோஜனங்களாக மாற்றுகிறாள்

இதன் மூலம், பிராட்டியின் ஸம்மதம் இன்றிக்கே ச்ருஷ்டி கார்யம் நடப்பதில்லை என்பதும், அவளது கடாக்ஷம் பெறாத எதுவும் ப்ரயோஜனங்கள் ஆவதில்லை என்பதும் நிரூபணமாகிறது.

**ப்ரஹ்மத்தின் ப்ரகாசம் பிராட்டியே**

*நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்கள் இவை.*

*முடிச் சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ?*
*அடிச் சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?*
*படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின் பைம்பொன்*
*கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே கட்டுரையே*
*[3-1-1]*

''உன் தலை மீதுள்ள கிரீடத்தின் அழகு நின் திருமுகத்தினின்று வெளிப்படும் ஒளியால் உண்டானதோ? உன் பாதாரவிந்தங்களில் இருந்து பரவும் ஒளியினால் உன்னடித் தாமரை ப்ரகாசிக் கிறதோ? உனது திருமேனியின் ஒளியினால் தான் நீ சூடிக் கொண்டிருக்கும் வஸ்த்ர ஆபரணாதிகள் பட்டொளி கொண்டு பளபளக்கின்றனவோ?'' என்று ஆழ்வார் வினவுகிறார். லக்ஷ்மீ தந்த்ரத்தில் தான் யாரென்று பிராட்டி உரைத்ததைக் கொண்டு பார்த்தோமானால் இங்கு அவனது ஒளியெனும் சக்தி பிராட்டியே.

*கட்டுரைக்கில் தாமரை நின் கண் பாதம் கை ஒவ்வா*
*சுட்டுரைத்த நன் பொன் உன் திரு மேனி ஒளி ஒவ்வாது*
*ஒட்டுரைத்து இவ் உலகு உன்னைப் புகழ் வெல்லாம் பெரும் பாலும்*
*பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரம் சோதி!*
*[3-1-2]*

''புடம் போட்ட ஸ்வர்ணமும் உன் திருமேனியின் தகதகப்பிற்கு ஈடாகாது. உனது இந்த ப்ரகாச த்தினால் தானே இந்த ப்ரபஞ்சம் கண்ணுக்குத் தெரிகிறது!'' என்று ப்ரபஞ்ச ரஹஸ்யத்தினை வெளிப்படுத்துகிறார் ஆழ்வார். லக்ஷ்மீ தந்த்ரத்தில் தான் யாரென்று பிராட்டி உரைத்ததைக் கொண்டு பார்த்தோமானால் இங்கு அவனது ப்ரகாசமெனும் சக்தி பிராட்டியே.

*பரம் சோதி நீ பரமாய் நின் இகழ்ந்து பின் மற்று ஓர்*
*பரம் சோதி இன்மையின் படி யோவி நிகழ்கின்ற*
*பரம் சோதி நின்னுள்ளே படர் உலகம் படைத்த எம்*
*பரம் சோதி ! கோவிந்தா ! பண்பு உரைக்க மாட்டேனே. [3-1-3]*

''நீ மட்டுமே ப்ரஹ்மம். மற்றொரு ப்ரஹ்மம் என்பதே இல்லை'' என்று ஆழ்வார் கொண்டாடுவதாய் அமைகிறது இந்தப் பாசுரம். லக்ஷ்மி தந்த்ரத்தில் தான் யாரென்று பிராட்டி உரைத்ததைக் கொண்டு பார்த்தோமானால் இங்கு அவனது தேஜஸ்ஸெனும் சக்தி பிராட்டியே.

*ப்ரஹ்மத்தின் மங்களம் பிராட்டியே*
*ஸிம்ஹாஸநே கமலயா க்ஷமயா ச விச்வம்*
*ஏகாதபத்ரயிதுமஸ்மத ஸூிந்நிஷண்ணம்|*
*லக்ஷ்மீஸ்வயம் வரஸநாதித யௌவநஶ்ரீ*
*ஸௌந்தர்ய ஸம்பத வலிப்தமிவாலிஹீய||*
(பராசரபட்டர் - ரங்கராஜ ஸ்தவம் - 66)

''பிராட்டியுடன் உண்டான சேர்த்தியினாலேயே பரப்ரஹ்ம ரூபியான எம்பெருமானுக்கு இளமை, அழகு, ஐஸ்வர்யம் என அனைத்தும் அமைந்தது'' என்கிறார் பராசரபட்டர்.

அவரே, ப்ரஹ்மம் மட்டுமல்லாது ஜீவர்களும் பொலிவது பிராட்டியினாலேயே என்பதை ஒரு ஸ்ரீ குணரத்னகோச ச்லோகத்தின் மூலம் நிர்தாரணம் பண்ணுகிறார்.

*ரதிர் மதி ஸரஸ்வதீ த்ருதி ஸம்ருத்தி ஸித்தி ச்ரிய:*
*ஸுதா ஸகி யதோ முகம் சிசலிஷேத் தவ ப்ரூ லதா | ||*
*ததோ முகம் மதி இந்திரே பஹூ முகீம் அஹம் பூர்விகாம்*
*விகாஹ்ய ச வசம்வதா: பரிவஹந்தி கூலங்கஷா:||*
(பராசரபட்டர் - ஸ்ரீ குணரத்ன கோசம் - 17)

இதில், கல்வி, செல்வம், ஜ்ஞானம், இஷ்ட பூர்த்தி, பதவி, புகழ் என்று அனைத்தும் நான் நீ என்று ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு பிராட்டியின் கடாக்ஷம் பெற்ற சேதனர்களைச் சென்றடைவதோடு அவர்களது ஸம்பந்தம் உடையோர்களையும் சென்றடைகின்றன என்கிறார்.

இதனை ஸ்வாமி தேசிகனும் அழுந்தச் சொல்கிறார்:

*யஸ்யாம் யஸ்யாம் திசி விஹரதே தேவி த்ருஷ்டி: த்வதீயா |*

*தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம் தந்வதே ஸம்பதோகா: ||*

## கார்த்திகையில் முக்கிய உத்ஸவங்கள்

| |
|---|
| **தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் (9 நாட்கள்)**<br>நவம்பர் 17 (திங்கள்) முதல்<br>நவம்பர் 25 (செவ்வாய்) வரை |
| **தீர்த்தவாரி**<br>நவம்பர் 25 |
| **கைசிக ஏகாதசி**<br>டிஸம்பர் 1 (திங்கள்) |
| **கைசிக த்வாதசி**<br>டிஸம்பர் 2 (செவ்வாய்) |
| **கலியன் திருநக்ஷத்ரம்**<br>டிஸம்பர் 4 (வியாழன்) |
| **திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம், திருக்கார்த்திகை தீப உத்ஸவம், தைலக்காப்பு**<br>டிஸம்பர் 5 (வெள்ளி) |

பிராட்டியின் கடாக்ஷம் வீழும் திசைகளிலெல்லாம் காட்டாற்று வெள்ளம் போன்று அனைத்து விதமான ஐச்வர்யங்களும் போட்டி போட்டுக் கொண்டு குவிகின்றன.

**பரமபதமும் பிராட்டியுடையதே**

*யஜ்ஞவித்யா மஹாவித்யா குஹ்யவித்யா ச சோபனே |*
*ஆத்ம வித்யா ச தேவித்வம் விமுக்தி பலதாயிநி||*
(பராசர பட்டர் - ஸ்ரீ விஷ்ணு புராணம்)

விமுக்தி பலதாயிநி தேவி த்வம் ஆத்ம வித்யா ச - ஸ்ரீப்ரபத்தியைக் குறிக்கும் இப்பதங்கள், உபேயமாகும் பிராட்டி உபாயமாகும் ஆத்ம வித்யையாக இருந்து மோக்ஷமெனும் பலனை அநுக்ரஹிக்கிறாள் என்றதன் மூலம், பிராட்டியின் மோக்ஷ ப்ரதத்வத்தினை மட்டுமின்றி அவளும் பரப்ரஹ்ம ஸ்வரூபம் தான் என்பதையும் நிஷ்கர்ஷித்தன.

யத் தூரே மநஸோ: யத் ஏவ தமஸ: பாரே யத் அதயத்புதம்

*யத் காலாத் அபசேளிமம் ஸுரபுரீ யத் கச்சத: துர்கதி:|*
*ஸாயுஜ்யஸ்ய யத் ஏவ ஸூதி: அதவா யத் துர்க்ரஹம் மத் கிராம்*
*தத் விஷ்ணோ: பரமம் பதம் தவக்ருதே மாத: ஸமாம் நாஸிஷு: ||*
(பராசரபட்டர் - ஸ்ரீ குணரத்ன கோசம் - 21)

மனதிற்கு (புத்திக்கு) எட்டாத தொலைவில் உள்ளதும், காலத்தால் மாற்றம் அடையாததும் (முதுமை என்பதே இல்லாதது), ஸ்வர்க்கத்தினையே நரகமாகத் தெரியும்படி செய்யவல்ல ஸந்தோஷாநுபவத்தினை அளிப்பதும், எம்பெருமானுடனான ஸாயுஜ்யத்தினை அநுக்ரஹிப்பதுமான பரமபதமும் கூட பிராட்டியுடையதே. அந்தப் பிராட்டியின் பதி (ச்ரிய:பதி) என்பதனால் அது எம்பெருமானுக்கு உரித்தாயிற்று என்கிறார் பட்டர்.

**ஆதிமூலத்தின் ஆதார ச்ருதி பிராட்டியே**

*ஈஷத் த்வத் கருணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத்ரக்ஷ்யதே*
*நஷ்டம் ப்ராக் ததலாபதஸ் த்ரிபுவனம் ஸம்ப்ரத்யநந்தோதயம் |*
*ச்ரேயோ ந: அரவிந்தலோசநமந: காந்தா ப்ரஸாதாத்ருதே*
*ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத் வஸுந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்||*
(ஸ்ரீ ஆளவந்தார் - ஸ்ரீ சதுச்லோகீ - 3)

பிராட்டி கடாக்ஷத்தினால் ப்ரபஞ்சம் ச்ருஷ்டிக்கப் படுகிறது. அந்த கடாக்ஷத்தின் தீக்ஷிண்யம் கிடைக்கப் பெறாத போதில் ப்ரபஞ்சமானது அழிகிறது. ஐஹிகம், கைவல்யம், பரமபதம் ஆகிய ஸுகங்களும் அவளது திருவருளாலேயே அமைகிறது. எம்பெருமானுக்கு ஸமமான சேஷித்வமும், ரஸாநுபவமும் பிராட்டிக்கும் உண்டு. பிராட்டியின் ஸம்மதமும் ப்ரீதியும் இன்றிக்கே எம்பெருமான் யாதொன்றையும் ஸங்கல்பிப்பதில்லை.

**அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்**
(அங்கீகாரபி: ஆலோகை: ஸார்த்த யந்த்யை);
**அவனே அஃதுண்டு உமிழ்ந்தான் அளந்தான்**
(லீலா விபூதி)
**அவனே அவனும் அவனும் அவளும்** (ஏக மிதுனம்)
**அவனே மற்று எல்லாமும் அறிந்தனமே.** (ஏக ஸ்வரூபம்)
(திருவாய்மொழி - 9.3.2)

அவனே அவனும் அவனும் அவளும் ஏக ஸ்வரூபம் என்பதில் த்ருடம் கொண்டு, ஆதிமூலமாகும் எம்பெருமானையும், ஸர்வாவஸ்தையிலும் அவனது ஆதார ச்ருதியாகும் பிராட்டியையும் சரணடைந்துய்வோம்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (32)

## Salutations To 'Naalu Kavi Perumal'

**Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore**

Thirumangai Azhwar, whose Thirunakshathram (Kaarthigai-Kaarthigai) falls on December 4 this year, commands a unique place among the Azhwars. Variously referred to as Kaliyan, Aali Nadan, Mangai Vendhan, Parakaalan, the 'youngest' of his tribe was born in ThirukKuraiyalur as the manifestation of the Divine Bow of Sriman Narayana.

If Nammazhwar composed four Prabandhams corresponding to the Vedas, Kaliyan came up with six numbers – one each for the auxiliaries of the Vedas known as Veda-angas. They are: Siksha (phonetics and phonology), Chandhas (meter), Vyakarna (grammar), Niruktha (etymology), Jyothisha (astrology and astronomy) and Kalpa (ritual).

All his works spanning 1,253 verses – Periya Thirumozhi (1084 verses), ThirukKurum Thaandakam (20), ThiruNedum Thaandakam (30), Thiruvezhu-Kootrirukkai (1), Siriya Thirumadal (40) and Periya Thirumadal (78) – ooze devotion, humility, beauty, class, variety, and to top it all, the doctrine of surrender. No wonder he is hailed as 'Master of the Four-fold Poesy' ('Naalu Kavi Perumal' in Tamil).

The four branches of poesy are:

**Aasu Kavi:** One with the expertise for impromptu composition – In fact, all his Prabandhams are spontaneous outpourings;

**Madhura Kavi:** One who can compose poems brimming with sweetness and exuberance – a major part of Periya Thirumozhi is example to this;

**Chithra Kavi:** One who is well-versed in specially-structured poems – Thiruvezhu-Kootrirukkai which has been arranged similar to the structure of the temple car of Amudhan, the Lord of ThirukKudandhai, perfectly fits the bill;

**Visthaara Kavi:** One who is proficient in elaborate poems – The two Madals and many a stretch in Periya Thirumozhi, wherein he performs Mangalaasaasanam to a particular deity, qualify for this variety.

It all started when, as a tough young man, he wished to marry Kumudhavalli. In order to accede



to that she laid down a condition that he feted 1,008 Bhagavathas daily and partook the Prasadham and their Sri Paadha Theertham. This he duly did and, as a consequence, he became poor over a period of time and had to start borrowing. After some time even that would not suffice and he resorted to waylaying and robbery to make ends meet. His life turned for the worse. It was then that the Lord decided that enough was enough, reformed him and made him sing His praise with distinction. What's more, the Azhwar took from the Lord the Thiru Ashtaakshara Manthra at dagger point and surrendered unto Him. This incident finds a mention in the Thaniyan by Sri Ramanuja:

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ் வேந்தன் வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரம் கொள்
மங்கையர்கோன் தூயோன் சுடர் மான வேல்.

Thirumangai Mannan has the unique honour of presenting himself with his consort in the idol form, at the ThiruVaali temple. He travelled through the length of the country in pursuit of Mangalaasaasanam which eventually covered 86 Divyadesams. Thirunaraiyur, ThirukKanna Puram, ThirukKudandhai, Thiruvenkatam and

Thiruvarangam may be termed as his most favourite as his indulgence in them is far too pronounced.

Thirumangai Azhwar once went to Thiruvarangam to worship the Lord on a Thiru-Kaarthigai day. During Thirumanjanam of the Lord and His Consorts, he proclaimed parity for Thiruvoymozhi with the Vedas. Not stopping with that, he brought Nammazhwar from Azhwar Thirunagari in procession to the Thiruvarangam temple and prayed to the Lord that he relished the recitation of Azhwar's Aruli-Cheyal also during the Adhyayana Uthsavam beginning on Sukla Paksha Ekadasi day and Arangan gleefully agreed at once. Accordingly, during the 10 days, the Vedas were chanted in the morning and Thiruvoymozhi was recited in the evening. A delighted Ranganatha ordered that this practice be followed every year and Kaliyan ensured its continuance.

This provided a great fillip to the status of Thiruvoymozhi in particular and the entire Divya Prabandham in general in the centuries to come. Thus, the Adhyayana Uthsavam has come to stay as a very important festival in every temple's calendar with the importance of Dravida Vedam matching that of its Sanskrit counterpart. In most temples today, it is a two-fold festival – the Pagal Paththu and Iraap Paththu – 10 days each observed either side of Vaikunta Ekadasi.

The following Thaniyan by ThirukKottiyur Nambi on Kaliyan, which is recited prior to Periya Thirumozhi, is a fitting tribute to the Azhwar.

கலயாமி கலித்வம்ஸம் கவிம்லோக திவாகரம்
யஸ்யகோபி: ப்ரகாசாபி: ஆவித்யம் நிஹதம் தம:!

"I salute and meditate upon Thirumangai Azhwar, who is known as Kalikanri (destroyer of the evil effects of Kali Yuga), who is a great poet and a sun to the entire world, whose rays (in the form of glittering verses) destroy the ignorance-triggered inner darkness."

***(to be continued…)***

## வைணவ வழக்குச் சொற்கள் 15

**நெட்டு முட்டு:** வாத்யகோஷ்டி; இசைக்கருவிகள்; orchestra

**நடைபாவாடை:** மதிப்புக்குரியவரை வரவேற்கும் முறையில் நீண்ட அழகான துணியை விரித்து அதன் மீது நடந்துவரச் செய்வதான கௌரவம்

**நாச்சியார்:** ஆண்டாள்; Consort

**நாச்சிமார்:** தேவியர்

**நாகரிகர்:** ரஸிகர்

**நாகணை:** ஆதிசேஷனாகிய படுக்கை

**நாழிகை கேட்டான் வாயில்:** நாழிகை வட்டில் வாயில் (நாழிகை வட்டில் = கடிகாரம்)

**நிபந்தம் / நிவந்தம்:** அறக்கட்டளை; Endowment

**நிறம்:** கழுத்தின் கீழ்ப்பகுதி

**நிர்வாஹம்:** பொருள் விளக்கம்; Interpretation

**நியமனம்:** உத்தரவு; Command

**நிர்ஹேதுக கடாக்ஷம்:** எவ்வித முகாந்திரமுமின்றியே அருள் பாலிப்பது; (காரணமும் தகுதியுமில்லாம லேயே இறைவன் அனுக்ரஹித்தல்)

**நிரு யஜ்ஞம்:** வேற்றுமனிதர் அல்லது ஏழைகட்கு உணவிடல் (அன்றாடம்)

**நித்ய ஸூரிகள்:** பரமபதத்தில் திருமாலுடன் என்றும் வாஸம் செய்பவர்கள்

**நித்ய விபூதி:** வைகுண்டம்; அந்த பரமபதத்தில் நித்யஸூரிகளுடனும் முக்தர்களுடனும் நாராயணன் கூடியிருக்கும் நிலை

**நூலாட்டி:** மஹாலக்ஷ்மி

**நெறி வாசல்:** அடையும் உபாயமும் அடையப்படுவதும்

**'தென்னிந்திய வைணவம் – ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

***(தொடரும்...)***


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (32)

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter – 31**

**Sishya-kruthya Adhikaram**

Swami Desikan explains the duties of a Sishya in this chapter.

Swami lists the ways in which an Acharya helps the Sishya similar to a well-wisher finding a great treasure in the house of a very poor person and handing it over to him.

1. The Sastras have laid down that a Sishya should be grateful to his Acharya and not commit treason against him. But this was just to prevent him from being shamed in both Vibhuthis like Hiranya and Ravana, who insulted Prahlada and Vibhishana respectively, who advised them in good faith, but this is not to say that it could be a compensation ever. (Returning the favour to an Acharyan is impossible)
2. It is said that a Sishya should submit his Sareeram, wealth, and life to his Acharyan. He should submit Guru Dakshina according to his ability -- Swami says that these are similar to rules mandating prostration, namaskaram, etc., and would not equal to returning the favour to the Acharyan who is compassion personified.
3. That the Sishya should conduct himself with Acharyan just how he would conduct himself with Bhagavan was said not for compensation but for him not to become blind since his eyes are his Saasthras and for him not to lose Acharya anubhavam here which is equivalent to Bhagavath anubhavam.

Thus, compensating the Acharyan is impossible as said by Sri Saandilya Bhagavan in Saandilya Smriti thus: "Even Devas cannot compensate an Acharyan who has given Brahmavidya. However, the Sishya should submit something within his means with love and affection". Hence, a Sishya could but console himself by submitting something to honour the Acharyan and cannot consider himself to have compensated the Acharyan for what he received. What could he do then?

Whatever he has learnt should not be made purposeless by indulging in misdeeds. He should not propagate the Rahasyas to all and sundry, making it like a garland in the hands of a monkey. He should



not give it to persons who are of envious nature. Even Srirama used to denote as Vasishta sishya only and thus, for the Acharyan who gave Sri Vaikuntam itself to an ordinary person, one should remain eternally indebted and conduct himself accordingly.

When the Sishya, in turn, has an opportunity to pass on the knowledge, he should illuminate his Guru Parampara and express his gratefulness and the Rahasyas' greatness.

One who imparts Adhyathma Vidya should have learnt it in a proper manner and not obtained it through his own study or hidden indirect study which is reprehensible like wearing a stolen ornament and this could cause adverse effects. Even when he has learnt it directly from his Acharyan, if it was not done as prescribed in the Saasthras, then he would be shamed as revolting.

He should always illuminate his Acharyan and if he doesn't, it is a great sin and his teaching won't have clarity and his Sva Nishtai would be impacted. But he should also not refuse to teach a Sathsishyan which is disobeying sastras, just as a lamp-holder has the duty of passing on the lamp to someone else eligible, to hold it for the king, if he is needed elsewhere. And if he gets knowledge of any special meanings or interpretations unknown to others by the grace of Bhagavan, he should express them as having received them from his Acharyan only. Then all his teachings would be valued as being equal to Pramaanas. His Acharyan would also be satisfied with his efforts having become fruitful in the making of a Sath Sishya.

***(to be continued…)***

ஶ்ரீ:



# *With Pranams:*

**V.A. Raghu & Family,**
225/28, Prithivi Avenue 2nd Street,
Prakrithi Apartments,
Abhiramapuram, Chennai - 600 018.

**SVDD thanks Sri V.A. Raghu & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam





உத்திரம் – தாயார் தங்க ரதம் – ஸ்ரீமத் ஆண்டவன் மங்களாசாஸனம்









உத்திரம் - தாயார் தங்க ரதம் - ஸ்ரீமத் ஆண்டவன் மங்களாசாஸனம்





